TNTP170005292017

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.

முன்னிலை: **திரு. செ. ராஜ்குமார், B.A.B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, இலால்குடி.

2024-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 01-ம் நாள் திங்கட்கிழமை

**இ.ம. எண். 01/23 in அ.வ.எண்.353/2017**

சிவலிங்கம் .........மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

1. பிச்சையம்மாள்
2. ஜெயராமன்

.......எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு என் முன்பு 13.06.2024 அன்று விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.சங்கரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.J.இளையராஜா அவர்கள் முன்னிலையாகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதுரையையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

1) இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்:–</u>**

2.1) இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் ஆவார்கள். மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்து வாதிகள் தரப்பில் 2ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்ட நிலையில், 14.10.2022, 09.11.2022, 05.12.2022, 14.12.2022, 19.01.2023, 08.02.2023 ஆகிய தேதிகளின் வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டு, வா.சா.1 ஆஜராகவில்லை என்பதால் வா.சா.1 சாட்சியம் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டது, பின்னிட்டு, 03.03.2023, 17.03.2023, 10.04.2023, 07.06.2023, 10.07.2023 ஆகிய தேதிகளில் வாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டும், வாதிகள் தரப்பில் சாட்சிகளை முன்னிலைப்படுத்ததால் வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. ஆகவே மனுதாரருக்கு எதிராக எவ்வித சாட்சியங்களையும் முன்னிலைப்படுத்தாததால் நிலையில், அசல் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்:–</u>**

3.1) மனுதாரர்கள் தனது மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளில் இவ்வெதிர்மனுதாரர் குறிப்பாக ஒப்புக்கொண்டவற்றை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரகளே நிரூபிக்கக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். மனுதாரருக்கு அவரது மனைவிக்கும், உடல் நிலைக்கோளாறு ஏற்பட்டதால், நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளிக்க இயலவில்லை

என்றும், அசல் வழக்கில் வாதிகள் தரப்பு சாட்சியத்தை முன்னிலைப்படுத்தாமல் இருந்தது வாதிகளின் தவறுகையால் ஏற்பட்ட செயல் என்றும், வாதிகள் சாட்சிகளை விசாரித்து அசல் வழக்கின் விசாரணையை தொடர்ந்து நடத்த இருப்பதால், வாதிகளுக்கு ஒரு வாய்ப்பு வழங்கி மனுவை தள்ளுபடி செய்யும்படி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தா? இல்லையா? என்பதாகும்.

**<u>இருதரப்பும் கேட்கப்பட்டது.</u>**

5) மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதி தரப்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, 2ம் வாதி வா.சா.1 ஆக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து விசாரிக்கப்பட்டு, குறுக்கு விசாரணைக்கு வா.சா.1 ஆஜராகாததால், வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் போதிய வாய்ப்பளிக்கப்பட்டும், சாட்சியம் எதுவும் இல்லாததால், வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்யுமாறு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) எதிர்மனுதாரர்கள் தரப்பில், உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றும், வாதிகள் தொடர்ந்து வழக்கை நடத்தவிருப்பதால், வாதிகளுக்கு ஒரு வாய்ப்பு வழங்கும்படி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதோடு, முடிக்கப்பட்ட வாதிகள் தரப்பு

சாட்சியத்தை மீண்டும் திறந்து சாட்சியமளிக்க அனுமதி வேண்டி தாக்கல் செய்த இ,ம.எண்.2/23 மற்றும் 3/23 ஆகிய மனுக்கள் எதிர்மனுதாரர்களுக்கு ஆதரவாக அனுமதிக்கப்பட்டுள்ளதால் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கதக்கதல்ல என முடிவு செய்து, மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**7) முடிவாக,**

மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:–**

இல்லை.

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:–**

இல்லை.

S.RAJKUMAR Digitally signed by S.RAJKUMAR

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.